**ஜூலை - 21**

**"சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்கவே நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்." - யோவா 18 : 37.**

சத்தியத்துக்கு நமது கர்த்தர் உண்மையுள்ளவராயிருந்ததினாலே எதிராளியினாலே குருடாக்கப்பட்டவர்கள் அவரை எதிர்த்தார்கள். சத்தியத்திற்காக அவர் கொடுத்த சாட்சியே தன்னுடைய ஜீவனை இழக்கக் காரணமாயிருந்தது. சத்தியத்தின் ஆதரவுக்காக அவர் தன்னுடைய ஜீவனைக் கொடுத்ததே மீட்கும் பொருளாக அமைந்தது. அதுபோலவே, கர்த்தரை உண்மையாகப் பின்பற்றுகிற நாம் எல்லோரும், தேவனுடைய குணம் ஏற்பாடு இவைகள் சம்பந்தமான சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். உண்மையாகவே யேசுவைப் பின்பற்றுகிற எல்லோரும், யேசு கிறிஸ்துவின் மூலமாகத் தங்களையே பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாகக் கொடுப்பதின் மூலமாக சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்கள். அதனால் தங்களை நஷ்டபடுத்த வேண்டியதாயிருக்கிறது. ஜீவாதிபதியோடு ராஜ்யத்தில் பங்குகொள்ள எதிர்பார்க்கிற ஒவ்வொருவரும் ராஜ்ஜியம் அதனுடைய அஸ்திபாரம், மகிமையில் முடிவாகிற மேல் கட்டடம் இவைகள் சம்பந்தமான ஒரு நல்ல அறிக்கையை சத்தியத்தின் சாட்சியாக மற்றவர்களுக்கு அறிவிப்போமாக. **- Z ’99, 123 (R 2470)**

இந்த உலகத்தில் நமது கர்த்தர் தனக்கென்று செய்ய வேண்டிய ஒரு திட்டமான வேலை இருந்தது. சத்தியத்துக்குச் சாட்சியாக இருந்ததே அந்த வேலையாகும். அதனுடைய எல்லா மண்டலங்களிலுமல்ல, ஆனால் அதனுடைய மத சம்பந்தமான காரியங்களில் மட்டும். தம்முடைய பிதாவினால் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலையை யேசு உண்மையுடன் செய்து முடித்தார். தன்னுடைய வேலையை நடப்பிக்க சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும், அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், உபயோகப்படுத்தினார். எதிர்ப்பின் பயமோ, மற்றவர்களுடைய தயவைப்பெற வேண்டுமென்கிற ஆசையோ தன்னுடைய விசுவாசத்தின் போக்கிலிருந்து விலக அவருடைய மனஉறுதியை சோதிக்க முடியவில்லை. **- P ’32, 95**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஏசா 55:4; 1தீமோ 6:14; வெளி 1:5; 3:14; ரோம 15:8-12; மத் 7:21-23;10:32,33; யோவா 1:15-18; 9:22-38; 12:42,43; ரோம 10:8-10.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 201 (R 5720)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சத்தியத்துக்குச் சாட்சி கொடுத்தேனா? எப்படி? ஏன்? பலன்கள் எவை?**